முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved

**பரீட்சைத் திணைக்களம்- A PLUS CAMPUS**
**Exam Department - A PLUS CAMPUS**
**විභාග දෙපාර්තමේන්තුව - A PLUS CAMPUS**

**தரம்–06 முதலாம் தவணைப் பரீட்சை , 2026**
**ශ්‍රේණිය-06 පළමු වාරය විභාගය, 2026**
**Grade-06 First Term Examination, 2026**

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம்<br>Science | சுட்டெண்/Index No:……………… | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |


பகுதி-1

1. அங்கி ஒன்றின் திணிவு கனவளவு பருமனில் ஏற்படும் மீளா அதிகரிப்பு எவ்வாறு அழைக்கப்படும்
   1. இனப்பெருக்கம் 2. போசணை 3. வளர்ச்சி 4. அசைவு


2. 
   படத்தில் காட்டப்பட்டுள்ள நுண்ணங்கி எது?
   1. பரமேசியம் 2. அமீபா
   3. பற்றீரியா 4. கிளைமிடோமொனாசு

3. தாவரங்கள் உணவு உற்பத்திற்கு பயன்படுத்தும் வாயு எது?
   1. நைதரசன் 2. காபனீரொட்சைட்டு 3. ஒட்சிசன் 4. ஐதரசன்


4. தெளிந்த சுண்ணாம்பு நீரின் நிறம் யாது?
   1. நிறமற்றது 2. இளஞ்சிவப்பு 3. பால் நிறம் 4. மஞ்சள்

5. 

   அருகில் காட்டப்பட்டுள்ள வளர்ச்சி வரைபானது எவ்வாங்கிக்கு பொருத்தமானது?
   1. மூங்கில்
   2. பலா
   3. பப்பாசி
   4. மான்

6. 
   A B
   A,B ஆகிய இரு அங்கிகளுக்கும் பொதுவான இயல்பாக அமைவது
   1. தற்போசணி
   2. அசைவு
   3. பிறபோசணி
   4. இடப்பெயர்ச்சி


7. உயிரங்கியினுள் சக்தி உற்பத்தி செய்யும் செயன்முறை
   1. வளர்ச்சி 2. இனப்பெருக்கம் 3. சுவாசம் 4. போசணை




8. திணிவைக் கொண்டதும் வெளியில் இடத்தை கொள்வதுமான பொருள்
   1. மின் 2. ஒளி 3. வெப்பம் 4. வளி

9. இப் பரிசோதனையின் போது வாயுச்சாடிகளினுள் பெறப்படும் அவதானம் யாது
   1. ஊதுபத்தி தீப்பற்றும்
   2. புகை மேலே செல்லும்
   3. புகை சீராகப்பரவும்
   4. புகை கீழே இறங்கும்

10. வினா 9 செயற்பாட்டில் இருந்து நீர் பெறும் முடிவு யாது?
    1. வளிக்கு திணிவு உண்டு
    2. வளி இடத்தைக் கொள்ளும்
    3. வளி ஓர் சடப்பொருளாகும்
    4. வளி ஓர் சக்தியாகும்

11. 


அளக்கும் உருளை ஒன்றைப்பயன்படுத்தி திரவமொன்றின் கனவளவை அளவிடும் போது கண் அமையவேண்டிய அமைவைச் சரியாகக் குறிப்பது
    1. நிலை A
    2. நிலை B
    3. நிலை C
    4. நிலை D

12. திட்டமான கனவளவையும் திட்டமற்ற வடிவத்தையும் கொண்ட சடப்பொருள் எது?
    1. ஒட்சிசன் 2. பால் 3. செங்கல் 4. L.P வாயு

13. யாதேனும் இயல்பொன்றை அடிப்படையாக் கொண்டு உண்டு அல்லது இல்லை என சடப்பொருளை வகைப்படுத்தல் எவ்வாறு அழைக்கப்படும்
    1. பாகுபாடு 2. கூட்டமாக்குதல் 3. வகைப்படுத்தல் 4. இணைக்கவர்ச் சுட்டி

14. இரவு நேரங்களில் இலை கூம்பிக் காணப்படும் தாவரம் எது?
    1. வாகை 2. பலா 3. வேம்பு 4. வெண்டி

15. இடம்பெயர்வைக் காட்டக் கூடிய அங்கி எது?
    1. தாவரம் 2. கடல்அனிமனி 3. மனிதன் 4. முருகைக்கற் பொலிப்பு

16. விலங்குகள் பல்வகைமையின் முக்கியத்துவமாக அமையாதது
    1. சூழல் சமனிலை பேணப்படும்
    2. சூழலின் அழகு அதிகரிக்கும்
    3. விலங்குகள் அழியாது பாதுகாக்கப்படும்
    4. சூழல் மாசடையும்

17. பின்வரும் ஒப்பீட்டில் தவறானது

| தாவரம் | விலங்கு |
|---|---|
| 1. இடம்பெயரும் | இடம்பெயராது |
| 2. பச்சையம் உண்டு | பச்சையம் இல்லை |
| 3. எல்லையற்ற வளர்ச்சி | எல்லைக்குட்பட்ட வளர்ச்சி |
| 4. தற்போசணி | பிறபோசணி |

18. நீரில் காணப்படும் நுண்ணங்கிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு மிகப் பொருத்தமான உபகரணம்
    1. தொலைகாட்டி 2. கூட்டுநுணுக்குக்காட்டி 3. கைவில்லை 4. அரிய இருவிழியன்


19. கைகளால் தொட்டுணரப்படும் சடப்பொருட்களின் கரடான அல்லது மென்மையான அமைப்பு
    1. வன்மைத்தன்மை 2. வாட்டத்தகுமியல்பு 3. நீட்டத்தகு இயல்பு 4. இழையமைப்பு

20. ஒளித்தொகுப்பின் முக்கியத்துவமாக அமையாதது
    1. வளிமண்டலத்தில் வாயுக்கள் மாறாமல் உள்ளது
    2. அங்கிகளுக்கு தேவையான உணவு கிடைக்கின்றது
    3. சுவாசத்திற்கு தேவையான வாயு கிடைக்கின்றது
    4. சூழலை குளிர்ச்சியாக வைத்திருக்கும்

பகுதி-2

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக**

01) A



1. தரப்பட்ட சூழலை அவதானித்து அட்டவணையை நிரப்புக

| உயிருள்ளவை | உயிரற்றவை |
| --- | --- |
| a. ........................................ | d. ........................................ |
| b. ........................................ | e. ........................................ |
| c. ........................................ | f. ........................................ |

(3புள்ளி)

2. இவற்றில் எல்லைப்படுத்தப்பட்ட வளர்ச்சியை காட்டுபவற்றிற்கு இரு உதாரணங்கள் தருக

.......................................................................................................

....................................................................................................... (2புள்ளி)

3. பின்வரும் அங்கிகளின் இடம்பெயர்வு முறைகளைத் தருக

யானை- .......................................................................................................

கிளி- .......................................................................................................


மீன்- ....................................................................................................... (3புள்ளி)

4. நீரில் காணப்படும் மீன் சுவாசத்தின் போது

a. உள்ளெடுக்கப்படும் வாயு எது- ..........................................................

b. வெளிவிடப்படும் வாயு எது- .......................................................... (2புள்ளி)

B.




1. மேற்காட்டப்பட்ட படத்தில் தாவரம் நிகழ்த்தும் உயிர்ச் செயன்முறை யாது?

   ........................................................................................................................ (1புள்ளி)

2. இவ்வுயிர் செயன்முறைக்காக தாவரம் பயன்படுத்தும் A,B,C ஆகிய காரணிகளை குறிப்பிடுக

   A- ....................................................... B- ............................................................

   C- ....................................................... (3புள்ளி)

3. இச்செயன்முறையின் போது வெளிவிடப்படும் வாயு D எது?

   D- ........................................................................................................................ (1புள்ளி)

4. வெளிவிடப்படும் வாயு D யை அங்கிகள் எவ்வுயிர்ச் செயன்முறையின் போது உள்ளெடுக்கின்றன

   ........................................................................................................................ (1புள்ளி)

5. இவ்வுயிர்ச் செயன்முறையின் அடிப்படையில் தாவரங்கள் எவ்வாறு அழைக்கப்படும்

   ........................................................................................................................ (1புள்ளி)

6. தாவரங்கள் உற்பத்தி செய்யும் உணவின் மீது நேரடியாக அல்லது மறைமுகமாக தங்கியுள்ள விலங்குகள் எவ்வாறு அழைக்கப்படும்

   ........................................................................................................................ (1புள்ளி)

7. சில நாட்களின் பின்னர் தாவரம் சூரியவொளியை நோக்கி வளைந்து வளர்ந்தது இச்செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்

   ........................................................................................................................ (1புள்ளி)

8. படத்தில் காட்டப்பட்ட செயற்பாட்டால் கிடைக்கும் அனுகூலம் ஒன்று தருக

   ........................................................................................................................ (1புள்ளி)

பகுதி- III

03) A. அட்டவணை நிரப்புக


| சூழலில் உள்ளவை | திணிவு உண்டு(√) இல்லை(x) | வெளியில் இடத்தை கொள்ளும்(√) கொள்ளாது(x) |
|---|---|---|
| நீர் | | |
| சூரிய ஒளி | | |
| வளி | | |

(3புள்ளி)

B. மேற்படி அட்டவணையில் இருந்து

1. திணிவைக் கொண்டதும் வெளியில் இடத்தைக் கொள்வதுமானவை ....................................... எனப்படும்.
2. திணிவைக் கொண்டிராதவையும் வெளியில் இடத்தை எடுத்துக் கொள்ளாததுமானவை .......... ............................................. எனப்படும் (2புள்ளி)

C.




தரம்-6 மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடு ஒன்றை மேலேயுள்ள படம் காட்டுகின்றது

1. பலூன் B யில் உள்ள வாயுவை மெதுவாக வெளியேற்றும் போது புயங்கள் X,Y என்பன தொடர்பாக உமது அவதானம் யாது

   புயம்X- ..............................................................................................................

   புயம்Y- .............................................................................................................. (2புள்ளி)

2. பின்னர் பலூன் A யிலுள்ள வளியும் மெதுவாக வெளியேற்றப்படுமாயின் தற்போது புயங்கள் X,Y தொடர்பாக உமது அவதானம் யாது?

   ..............................................................................................................

3. மேற்படி செயற்பாட்டில் இருந்து பெறப்படும் முடிவு யாது?

   .............................................................................................................. (1புள்ளி)

4. வாயுச் சடப்பொருளின் மேற்படி இயல்பு தவிர்ந்த வேறோர் இயல்பைக் குறிப்பிடுக

   .............................................................................................................. (1புள்ளி)

D.


சடப்பொருள்

| திட்டமான வடிவம் உண்டு திட்டமான கனவளவு உண்டு | திட்டமான வடிவம் இல்லை திட்டமான கனவளவு உண்டு | திட்டமான வடிவம் இல்லை திட்டமான கனவளவு இல்லை |
|---|---|---|
| A. ........................ | B. ................................... | C. .................................. |
| உதாரணம் | உதாரணம் | உதாரணம் |
| 1. ............................ | 1. ............................ | 1. ............................ |
| 2. ............................. | 2. ............................. | 2. ............................. |

(3புள்ளி)

E.

1.




25ml நிற நீர் அளந்து எடுக்கப்பட்டு வெவ்வேறு வடிவம் கொண்ட பாத்திரங்களில் இடப்பட்டுள்ளது

இவ் அமைப்பு திரவங்களின் எவ் இயல்பை அறிவதற்காக மேற்கொள்ளப்பட்டது?

........................................................................................................................................ (1புள்ளி)

2.




a. படத்தில் காட்டப்பட்ட உபகரணம் யாது

......................................................................................................... (1புள்ளி)

b. இதில் காணப்படும் திரவத்தின் கனவளவு யாது

......................................................................................................... (1புள்ளி)

(மொத்தம் 20புள்ளி)



# A PLUS CAMPUS

CAMPUS
The Bright Future

## அனைத்தும் ஒரே இடத்தில்

## Grade:01-13

**தரம் 01 தொடக்கம் 13 வரையான அனைத்து பாடங்களும் மிக நுணுக்கமான முறையில் சிறப்பான ஆசிரியர்களால் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.**

## A/L
## Commerce , Arts

### கற்கை நெறிகள்

- Diploma In Information Technology
- Diploma In Spoken English
- Diploma In English
- Youngers Learn English (Cambridge )
- IELTS Preparation Class
- Certificate in Makeup Artists

### Our Facilities

- Learning management System (LMS)
- Modern Class Rooms
- Computer Labs
- Qualified Lecture Panel
- E-Library

மேலதிக தகவல்களுக்கு எமது இணையத்தளத்தை பார்வையிடவும்


Mallavi,Mullaitivu District, Northern Province , Sri Lanka

www.apluscampus.lk

+94 76 626 1801